**செய்தி வெளியீடு எண் : 1363** **நாள் : 08.08.2022**

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் சர்க்கரைத்துறை தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது**

***

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்களின் தலைமையில் சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று ( 08.08.2022 ) நந்தனம், சர்க்கரைத்துறை ஆணையர் அலுவலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூடுதல் சர்க்கரைத்துறை ஆணையர் திரு. த. அன்பழகன், இ.ஆ.ப. அவர்கள் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களையும் வரவேற்றார். கூடுதல் தலைமைச்செயலாளர்/ சர்க்கரைத்துறை ஆணையர், திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப. அவர்கள் ஆய்வுக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அலுவலர்களை அறிமுகம் செய்து வைத்து , ஆய்வினை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் முந்தைய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட 12 இணை மின் திட்டங்களில் 6 முடிவுற்ற நிலையில் மீதமுள்ள 6 திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் உயர் அதிகாரிகள், கட்டுமான பணி நிறுவனர் வால்சந்த் மற்றும் ஆலோசகர் மிட்கான் நிறுவனத்தினர் ஆகியோருடன் ஆய்வு செய்து, எதிர்வரும் 2022-23 அரவை பருவத்திலேயே முதலாவதாக எம்.ஆர்.கே, கள்ளக்குறிச்சி-1 மற்றும் கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தியினை பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் மீதமுள்ள சுப்ரமணிய சிவா, சேலம் மற்றும் நேஷனல் ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 2023-24 ஆம் அரவை பருவத்தில் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள்.

மேலும், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆலைகளில் மாதாந்திர கூட்டங்கள் மற்றும் கோட்ட அலுவலகங்களின் வாராந்திட கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்றும் முந்தைய ஆண்டுகளில் இருந்து வந்த 3 இலட்சம் எக்டர் கரும்பு பரப்பினை மீண்டும் தமிழ்நாட்டில் கொண்டுவரவேண்டும் என்றும் அதற்கு கள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அரசு அறிவித்த பல்வேறு திட்டங்களை கரும்பு விவசாயிகளிடையே கொண்டு சேர்க்க வேண்டும் என்றும், ஆலைகளில் சர்க்கரை கட்டுமானத்தினை உயர்த்தி சர்க்கரை உற்பத்தி செலவினை குறைத்திடும் வகையில் சர்க்கரை கட்டுமானம் அதிகம் பெறக்கூடிய மாதங்களில் அதிக கரும்பு அரவை செய்திட வேண்டும் என்றும்,சர்க்கரை கட்டுமானம் அதிகம் பெறும் சர்க்கரை ஆலைகளின் செயல் திறன் மற்றும் வெற்றிக்கதைகளை அனைத்து சர்க்கரை ஆலைகளும் தெரிந்து கொண்டு அதன்படி செயல்படுத்திட வேண்டும் என்றும்,

எத்தனால் மற்றும் இணை மின் உற்பத்தி மூலம் ஆலைகளை இலாபகரமாக இயக்கிடும் வகையில் ஆலையின் முழு அரவைத்திறனுக்கு ஏற்ப கரும்பு உற்பத்தியினை பெருக்கிட மேலாண்மை இயக்குநர்கள் / தலைமை நிர்வாகிகள் உரிய திட்டங்களை பகுதிக்கேற்றவாறு வகுத்து செயல்படுத்திட வேண்டும் என்றும், கரும்பில் இயந்திர அறுவடையை அனைத்து ஆலைகளிலும் கடைபிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும், தொடர் அரவையினை உறுதி செய்ய சர்க்கரை ஆலைகளில் பராமரிப்பு, பழுது நீக்க பணிகள், கரும்பு இருப்பு போன்ற பல்வேறு சாத்தியக்கூறுகளை ஆலை துவங்குவதற்கு முன்னர், ஆலையின் பொறியியல்

பிரிவினர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கூட்டாக ஆய்வு செய்து அரவை பணியினை குறித்த காலத்தில் துவக்க வேண்டும் என்றும்,

கரும்பு விவசாயிகள் எளிதில் அடையாளம் காணும் வகையில் களப்பணியாளர்கள் சீருடையுடன் பணிக்கு செல்லவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், ஆலைவாரியாக செயல்திறன், இணை மின் நிலைய பணிகளின் முன்னேற்ற நிலை, ஆலைகளின் செயல் பாடுகளை மேம்படுத்த வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள், ஆலைகளுக்கு தேவையான கரும்பு உற்பத்தியை மேம்படுத்த கரும்பு நடவு பரப்பளவு பெருக்கம் மற்றும் எதிர்வரும் அரவைப்பருவத்திற்கான முன்னேற்பாடு நடவடிக்கைக்கைகள் குறித்து கூர்ந்தாய்வு மேற்கொண்டார்.

மேலும், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், அரசு வழிவகைக்கடன் விரைவில் வழங்கப்பட்டு கரும்பு நிலுவைத்தொகை உடனடியக வழங்கிட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இயங்காமல் உள்ள சர்க்கரை ஆலைகளை இயக்கிட அரசினால் குழு அமைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச்செயலாளர்/ சர்க்கரைத்துறை ஆணையர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப.,, சர்க்கரைத்துறை கூடுதல் ஆணையர் திரு. த. அன்பழகன் இ.ஆ.ப.,,, சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குநர் திருமதி. வீ. தேவகி, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் திருமதி. ஆ.க. சிவமலர்,, பொது மேலாளர், தமிழ்நாடு சர்க்கரைக்கழகம் திரு. செ. இராஜேந்திரன், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் மேலாண்மை இயக்குநர்கள்/ தலைமை நிர்வாகிகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தலைமைப்பொறியாளர் (மரபுசாரா எரிசக்தி துறை) திரு. சு. சுரேந்திரன் மற்றும் நிதி கட்டுப்பாட்டு அலுவலர் (பொது) திரு. க. பாலகிருஷ்ணன் மற்றும் சர்க்கரைத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியாக சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குநர் திருமதி. வீ. தேவகி, அவர்கள், ஆய்வுக்கூட்டத்தை தலைமை ஏற்று நடத்திய மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், கூடுதல் தலைமைச்செயலாளர்/ சர்க்கரைத்துறை ஆணையர், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in